**இந்திய வானிலைத் துறை & தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகம்**

**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை**

**மண்டல வாரியான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை –21.06.2017**

**மாநிலத்தின் கடந்தவாரவானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 31°செ முதல் 40°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 29°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 19°செ முதல் 24°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 11°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

**1. மேற்கு மண்டலம்**

மேற்கு மண்டலப் பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான கோயமுத்தூர், ஈரோடு மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களில் வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கும் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 35°செ முதல் 36°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24°செ முதல் 25°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 75 முதல் 80 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 70 முதல் 75 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 18-20 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- ✓ தொடரும் மழையுடன் மணிக்கு 18கி.மீக்கும் மேல் வேகமான காற்றும் எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதத்திற்கு மேல் வயதுடைய வாழைகளுக்கு ஊன்று கொடுக்கவும். மேலும், முன்பட்ட கரும்பில் விட்டம் கட்டவும்.
- ✓ காலை மற்றும் மாலை வேளைகளில் காற்றின் ஈரப்பதம் அதிகமாக இருப்பதால் பருவகால திராட்சையில் கவாத்து செய்த 25 நாட்களில் சூடோமோனாஸ் (**Pseudomonas**) 20 கிராம் / 1 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.
- ✓ எதிர்பார்க்கப்படும் காற்றின் அதிக ஈரப்பதத்தின் காரணமாக பால் மாடுகளில் மடிவீக்கநோய் தாக்க வாய்ப்புள்ளது. எனவே, பால் கறப்பதற்கு முன்பும் கறந்த பின்பும் பொட்டாசியம் பெர்மாங்கனேட் கரைசலை கொண்டு கழுவுவதன் மூலம் நோய் வராமல் தவிர்க்க முடியும்.
- ✓ இறவை மக்காச்சோளம் மற்றும் சூரியகாந்தி நடவு செய்வதற்கு இதுவே உகந்த தருணமாகும்.
- ✓ தற்போது நிலவும் வானிலையில் மல்லிகை செடிகளுக்கு 10 கிலோ தொழு உரம் மற்றும் ஒரு செடிக்கு 60கிராம், தழைச்சத்து 120 கிராம் மணிச்சத்து, மற்றும் 120 கிராம் சாம்பல்ச்சத்து என்ற அளவில் உரமிடவும்.

**2. காவிரி டெல்டா மண்டலம்**

காவேரி பாசன பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். பகல் நேர வெப்பநிலையானது 37°செ முதல் 40°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 28°செமுதல் 30°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 40 முதல் 80 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் 6 முதல் 18 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ➢ திருந்திய நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள், இரண்டரை சென்ட் நிலத்தில் மேட்டு பாய் நாற்றாங்காலில் 5 கிலோ இரண்டாம் கொம்பு நெல் விதையை சீராக தூவி நாற்று விடவும். முதல் ஐந்து நாள் வரை பூவாளி உதவியுடன் நாற்றாங்கால் நன்கு நனையும்படி காலை அல்லது மாலை வேளைகளில் தண்ணீர் தெளிக்கவும்.
- ➢ குறுவை பருவத்திற்கு நாற்றாங்கால் தயார் செய்யும் போது ஒரு எக்டருக்கான 20 சென்ட் நாற்றாங்காலில் ஒரு டன் தொழு உரம் அல்லது கம்போஸ்ட் இடவேண்டும். கடைசி உழவின் போது நாற்றாங்காலுக்கு 40 கிலோ டிஏபி உரம் அடியுரமாக இடவேண்டும்.

- ➢ பருத்தியில் காய் புழுவின் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு இன்டாக்சாகார்ப் 15.8 SC 200 மி.லி என்ற அளவில் தெளிக்கவும்.
- ➢ தினமும் கறவை மாடுகளுக்கு 1-2 கிலோவும் மற்ற கால்நடைகளுக்கு 0.5-1 கிலோவும் அசோலா கொடுக்கலாம்.
- ➢ பசுந்தீவனம் மற்றும் அடர்தீவனத்தின் அளவை பகல் நேரத்தில் அதிகரித்தும், வைக்கோல் போன்ற உலர்தீவனத்தை குறைந்த அளவு அதிகாலை மற்றும் இரவு நேரங்களில் கொடுக்கவும்.

### 3. தெற்கு மண்டலம் -1

தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான திருநெல்வேலி, விருதுநகர், தூத்துக்குடி மாவட்டங்களில் வானம் மிதமான மேகமூட்டம் மற்றும் மிதமான ஈரப்பதமும் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலையானது 32°செ முதல் 41°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 25°செ முதல் 30°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலை நேரகாற்றின் ஈரப்பதம் 40 முதல் 80 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 2 முதல் 20 கி.மீ வேகத்தில் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ தற்பொழுது நிலவிவரும் தட்பவெப்பநிலையில் பருத்தியில் தண்டுக்கூன் வண்டின் தாக்குதல் தென்படுகிறது. இதனை கட்டுப்படுத்த கார்போபியூரான் 3 CG@ 33.3 கி/ எக்டர் இடவும். தகுந்த ஈரப்பதத்தில் பருத்திக்கு மண் அணைக்கவும்.
- ✓ வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் வானிலையில் கத்தரியில் தண்டு மற்றும் காய்த்துளைப்பானின் தாக்குதல் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. இதனை கட்டுப்படுத்த பாதிக்கப்பட்ட தண்டுப்பகுதிகளை அகற்றவும். குளோர்பைரிபாஸ் 20% EC @ 1 மி.லி. தெளிக்கவும்.
- ✓ வரும் தினங்களில் மிதமான மேகமூட்டம், இலேசான மழை மற்றும் மிதமான ஈரப்பதம் கொண்ட வானிலையில் கண்ணாடி இறக்கை பூச்சியின் தாக்குதல் தென்பட வாய்ப்புள்ளது. இப்பூச்சியை கட்டுப்படுத்த டை மீத்தோயேட் 30% EC @ 1 மி.லி. / லிட்டர் என்ற அளவில் கலந்து தெளிக்கவும்.
- ✓ தற்பொழுது நிலவும் வானிலையில் வெள்ளரியில் வெள்ளைஈயின் தாக்குதல் தென்படுகிறது. இதனை கட்டுப்படுத்த 5 சத வேப்பங்கொட்டை சாறை தெளிக்கவும்.
- ✓ கால்நடைகளுக்கு வெப்பத்தின் தாக்குதலில் இருந்து பாதுகாக்க 50 கிராம் தாதுஉப்பு கலவையை தண்ணீருடன் கலந்து கொடுக்கவும்.

### தெற்கு மண்டலம் -2

வரும் நாட்களில் மதுரை, சிவகங்கை, தேனி, புதுக்கோட்டை, திண்டுக்கல், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலையானது தேனி மாவட்டத்தில் மட்டும் 28°செ முதல் 29°செ, மற்ற மாவட்டங்களில் 35°செ முதல் 40°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலையானது தேனி மாவட்டத்தில் மட்டும் 20°செ முதல் 21°செ ஆகவும், மற்ற மாவட்டங்களில் 25°செ முதல் 29°செஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 40 முதல் 80 சதவிகிமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 4 முதல் 18 கி.மீ வேகத்தில் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ தற்போது நிலவும் பருவநிலையில் தென்னங்கன்றுகளுக்கு நீர் ஆவியாதலுக்கேற்ப சொட்டு நீர்ப்பாசன முறையின் படி நீர் பாய்ச்சுதல் முக்கியமானதாகும். பொதுவாக ஜுன் மற்றும் ஜுலை, அக்டோபர் முதல் டிசம்பர் வரை தென்னை மரங்களுக்கு நிர்நிறைந்த பகுதிக்கு ஒரு நாளைக்கு 45 லிட்டர், நிர் ஓரளவு கிடைக்கும் பகுதிகளுக்கு ஒரு நாளைக்கு 30 லிட்டர் மற்றும் வறட்சியான பகுதிகளுக்கு ஒரு நாளைக்கு 15 லிட்டர் வீதம் நீர்ப்பாசனம் கிடைக்கும்படி செய்யவேண்டும்.
- ✓ தற்போது நிலவும் வானிலையின் காரணமாக சாறு உறிஞ்சும் பூச்சிகளான பப்பாளி மாவுப்பூச்சி, வெள்ளை ஈ மற்றும் சுருள் வெள்ளை ஈயின் தாக்குதல் விவசாய மற்றும் காய்கறிப் பயிர்களில் அதிகமாகத் தென்பட வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் பப்பாளி மாவுப் பூச்சியின் தாக்குதலைக் கண்காணித்து ஒட்டுண்ணிகளை விட்டு கட்டுப்படுத்தலாம்.

- ✓ கால்நடை வளர்ப்பில் விவசாயிகள் தங்கள் ஆடுகளை ஆட்கொல்லி நோயிலிருந்து காப்பாற்ற தங்களின் ஆடுகளுக்கு ஜுன் மாதத்தில் பிபிஆர் எனப்படும் ஆட்டுக்கொல்லி நோய்க்கான தடுப்பூசி போட்டுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- ✓ தற்போது நிலவும் தட்பவெப்ப சூழலில் பயறு வகை பயிர்களில் தானியங்களின் மகசூலை அதிகரிக்க 100 பிபிஎம் சாலிசிலிக் அமிலத் தழை தெளிப்பாக முப்பது மற்றும் நாற்பத்தி ஐந்தாவது நாட்களில் தெளித்தால் அதிக மகசூல் கிடைக்கும்.
- ✓ தற்போது நிலவும் பருவநிலைில் கொடிவகை காய்களான சுரக்காய் சாகுபடியில் உரமிடுதல் தக்க தருணமாகும். ஒவ்வொரு குழிக்கும் மக்கிய தொழு உரம் 10 கிலோ இடவேண்டும். அத்தோடு அடியுரமாக ஒவ்வொரு குழிக்கும் 6:12:2 என்ற அளவில் தழை, மணி மற்றும் சாம்பல் சத்துக் கலவை 100 கிராம் அளவுக்கு இடவேண்டும். மேலுரமாக பூக்கும் தருணத்தில் ஒவ்வொரு குழிக்கும் 10 கிராம் தழைச்சத்தை இடவேண்டும்.
- ✓ நிலவும் பருவநிலையில் தானியவகை பயிர்களுக்கான நீர் மேலாண்மை செய்வது முக்கியமானதாகும். எனவே விவசாயிகள் சோளம் விதைத்தவுடன் மற்றும் விதைத்த 3, 7, 12, 17ம் நாள் சீர் கட்ட ணேடும். மேலும் களிமண் பாங்கான பூமிக்கு விதைத்தவுடன் மற்றும் விதைத்த 3, 9, 16 ஆம் நாள் நீர் பாய்ச்சினால் போதுமானதாகும்.

### 4. மலைப்பிரதேச மண்டலம்

வரும் நாட்களில் மலைப்பிரதேச மண்டலமான நீலகிரி மாவட்டத்தில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 22°செ முதல் 23°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 11°செ முதல் 12°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 75 முதல் 85 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 8-12 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### வேளாண் அறிவுரை

- ✓ அடுத்த ஐந்து நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது.
- ✓ நீலகிரி மாவட்டத்தில் மழை நாட்களில், தண்ணீர் தேங்குவதை தடுக்க தோட்டத்தில் உரிய வடிகால் வசதி செய்ய வேண்டும்.
- ✓ பூண்டு பயிரில் இரப்பர் தன்மை கட்டுப்படுத்த, யூரியா உரம் பயன்பாட்டை தவிர்த்து, அமோனியம் சல்பேட் உரத்தை பயன்படுத்தவும்.
- ✓ மேகமூட்டத்தின் காரணமாக கேரட் பயிரில் வரும் இலை கருகல் நோயை கட்டுப்படுத்த ஜினப் + ஹெக்ஸாகோனசால் @ 1.5 கிராம்/லிட்டர் இலை வழியாக தெளிக்கவும்.

### 5. வடமேற்கு மண்டலம்

வரும் நாட்களில் வடமேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் தென்படும். பகல்நேர வெப்பநிலை 37°செ இரவுநேர வெப்பநிலை் 26°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 40 முதல் 70 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 6 கி.மீ வேகத்திலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### வேளாண் அறிவுரை

- ✓ தென்மேற்கு பருவ மழையின் தாக்கம் அதிகமாக காணப்படாவிடினும் மேகமூட்டமும் சற்றே உயர்ந்த காற்றின் வேகமும் கொண்ட வானிலை நிலவும், பகல் வெப்பம் உயர்ந்து காணப்பட்டாலும் அதிக நேரத்திற்கு நிலைகொள்ளாமல் குறைந்துவிடும். இதன் காரணமாக கோழிகளிடையே வெப்ப அயற்சியின் அறிகுறிகள் காணப்படாது. முட்டை உற்பத்தி அதிகபட்ச அளவு காணப்பட இது தகுந்த வானிலையாகும். பூஞ்சான நச்சு சில தீவன மூலப்பொருட்களில் குறிப்பாக சூரியகாந்தி புண்ணாக்கு மற்றும் புதிய மக்காச்சோளம் ஆகியவற்றில் காணப்படுகிறது. எனவே, இவற்றின் உபயோகத்தில் மிகுந்த கவனமும் எச்சரிக்கையும் தேவை.
- ✓ தற்போது மானாவாரி நிலக்கடலையில் கழுத்து அழுகல் மற்றும் வேர் அழுகல் காணப்படுகிறது, இதனைக் கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீருக்கு டைபென்கொனசோல் 1 கிராம் என்ற அளவில் கலந்து பாதிக்கப்பட்ட இடங்களில் ஊற்றிடவும்.

**6. வடகிழக்கு மண்டலம்**

அடுத்து வரும் ஐந்து நாட்களிலும் வடகிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், கடலூர், வேலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 35°செ முதல் 39°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 26°செ முதல் 30°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காலை மற்றும் மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 40 முதல் 82 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 6 முதல் 14 கி.மீவேகத்திலும் வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- ✓ அடுத்த ஐந்து நாட்களுக்கு இலேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது.
- ✓ கோழிப்பண்ணைகளில் தீவன தொட்டியை காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை உயர்த்தி வைப்பதால் வெப்பத்தாக்கத்தை குறைக்கலாம்.
- ✓ கொட்டகையின் மேற்கூரையின் மீது தென்னங்கீற்று அல்லது வைக்கோல் பரப்பி அதன் மீது தண்ணீர் தெளிப்பதன் மூலம் வெப்பத் தாக்கத்திலிருந்து கால்நடைகளை பாதுகாக்கலாம்.
- ✓ ஆட்டு கொட்டகையின் தரையை3 அல்லது 4 அங்குல அளவு மண்ணை மாற்றுவதன் மூலம் நோய தாக்குதலிருந்து பாதுகாக்கலாம்.
- ✓ புறக்கடை கோழி வளர்ப்போர் கோழிகளுக்கு வெள்ளை கழிச்சல் நோய் (இராணிகட்) தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும்.
- ✓ நெற் தரிசு உளுந்து மற்றும் பச்சை பயிரில் மேல் சாம்பல் நோயினைக் கட்டுப்படுத்த 5% வேப்பங்கொட்டைச் சாறு கரைசல் அல்லது ஏக்கருக்கு 400 கி மேன்கோசெப் அல்லது 1 கிலோ நனையும் கந்தகத்தூளை காலை அல்லது மாலை வேளையில் தெளிக்கவும்.

**7.அதிக மழை பெறும் மண்டலம்**

வரும் நாட்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். பகல்நேர வெப்பநிலை 32°செ முதல் 33°செ ஆகவும் இரவுநேர வெப்பநிலை 26°செ முதல் 27°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காலை மற்றும் மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 75 முதல் 85 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது காற்றின் வேகம் மணிக்கு 20-24 கி.மீ. வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ வரும் நாட்களில் 46 மி.மீ அளவு மழை பெய்ய வாய்ப்புள்ளது.
- ✓ அதிகமான காற்றுடன் (20-24கி.மீ வேகம்) மழை இருப்பதால் இளம் இரப்பர் மற்றும் வாழை மரங்களுக்கு கம்புகளால் முட்டு கொடுக்க வேண்டும்.
- ✓ அறுவடைச் செய்யப்பட்ட வாழைத்தார்களை உலர்வான இடங்களில் சேமித்து வைக்கவும். இதனால் மழையினால் ஏற்படும் நோய்களை தடுக்கலாம்.
- ✓ ரப்பர் : பாலித்தீன் ரைன் கார்ட் ஐ மரத்தின் பால் வடியும் பகுதியில் மேல் பொருத்தவும். இதனால் மழை காலத்திலும் பால் வெட்டலாம்.
- ✓ அன்னாசி : மழை நீர் தேங்காமல் இருக்க வடிகால் வசதி செய்ய வேண்டும்.
- ✓ பலா : அறுவடைச்செய்யப்பட்ட பலா பழங்களை உலர்வான இடங்களில் சேமித்து வைக்கவும்.
- ✓ மிளகு : மழை இருக்கும் பட்சத்தில் வேர் விட்ட மிளகு குச்சிகளை நடவு செய்யலாம்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம்**
**த.நா.வே.ப.கழகம்,கோவை**